(Tamil)

1098
9/91

2959 — 18 — P

உ

பரமசிவம் துணை.

2959 Tamil

ஸ்ரீமதி, சரோஜனிதேவி,

தேசிய தொண்டர்கள் இவர்கள் செய்த

# உப்புசத்தியாகிரக பாட்டு




இஃது

முத்தமிழ் க்ஷேத்திரம் தஞ்சை வித்வான்,

சுப்பராஜன் அவர்களாலியற்றப்பெற்று,

சென்னை,

V. R. ஏழுமலைப்பிள்ளை அவர்களால்,

தமது, ஸ்ரீ "எம்பிரான்" பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

20—10—31

இதன் விலை] [அணா 2.

ஸ்ராஙகர்மு

ஆ.ட்டப்பக்கிபட

.2 ஸை]    18

உ

பரமசிவம் துணை.

# பரதஊழிய திலகமென்னும்

# உப்புசத்தியாகிரக

# பாட்டு.



நூலாசிரியர்:—

முத்தமிழ்க்ஷேத்திரம் தஞ்சை

வித்வான், சுப்பராஜன் அவர்கள

பதிப்பாசிரியர்:—


**V. R. ஏழுமலைப் பிள்ளை**

189, வால்டாக்ஸ் ரோட்

சௌகார்பேட்டை போஸ்டு மதராஸ்.

சுத்தப்பதிப்பு] 4-8-31. [விலை அணா 2

NATIONAL ARCHIVES LIBRARY
No 2959
Date 9-3-72
GUVT. OF INDIA

# முக்கிய அறிக்கை விருத்தம்

உண்மையாய் ஒருவனுக்கு உத்தமி பெற்றிருந்தால்
அன்புட னெனதுநூலை அச்சிட மனதிலெண்ணுன்
மூன்றுறு பேர்சேர்ந்து மூதாரி முண்டைபெற்றுல்
என்றுலை அச்சிட எண்ணங்கொள்வான்தானே

வியாபாரிகட்கும் மற்ற கல்விமான்களுக்கும் V. R. ஏழுமலைப் பிள்ளை தெரிவிப்பது யாதெனில் என்னுல்பதிப்பித்த புத்தகங்களை சில போலிவியாபாரிகள் துர் எண்ணங்கொண்டு என் பெயர்களையும் பாட்டுகளையும் பாட்டுகளை முன்பின்னுக பிரட்டியும் பெயர்மட்டும் வைத்துக்கொண்டு அச்சிடுகின்றனர் அப்போலிப் புத்தகங்களை கண்டு ஏமாராமல் V.R. ஏழுமலைப் பிள்ளை யவர்களால்பதிப்பித்த புத்தகமாவென தயவு செய்து பார்த்து வாங்கவும்.

இப்படிக்கு

V. R. ஏழுமலைப் பிள்ளை,

189, வால்டாக்ஸ் ரோட்,

சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

உ

ஓம்

ஸ்ரீ பாரதமாதா துணை.

முத்தமிழ் க்ஷேத்திரம்

தஞ்சை சுப்பராஜன் அவர்களியற்றிய

பாரத ஊழிய திலகமென்னும்

மகாத்மா காந்தி

# உப்பு சத்தியாகிரக பாட்டு.

விநாயகர் துதி வெண்பா

நிறைவளங்கள் மலிகரந்தை நிலயமதில் மேன்மைபெரு
சமரச சன்மார்க்கநெறி சங்கத்தார்—இனிமையுற
பாரத ஊழியத்திலகப்பா நவிலத் தே மிகுத்த
கரிமுகத்துக் கணபதியே கார்.

பாரதமாதா துதி.

ஆலவாய் மதுராபுரி என்றமெட்டு.

பல்லவி.

சேவை ஸ்ரீ ஜெயமேவும் பாரத
தேவி ஆதரித்தருள்புரி
தேவி ஆதரித்தருள்புரி—திருவடி
உதவிடு கிருபாகரி சே

தொகையறு.

ஆலவாய் இந்திய சுயாக்ஷிகைபற்றுதற்
கருள் உதவு பாதமாதே
அகில சத்தியாக்கிரக மகிழநிறை வெற்றிபெற
அனுக்கிரகமளியிப்போதே

## பாட்டு.

பல்லவி எடுப்பு.

தேவையுன திரு பாதபங்கயம்
தெரிசனானந்த காக்ஷியே
தெரிசனானந்த காக்ஷியே—சுப்ப
ராஜன் தமிழ் சர்வசாக்ஷியே தே

---

## துவாதசாந்த என்ற மெட்டு.

பல்லவி.

கருணைநேசி கதர்விஸ்வாசி
காந்தி மகான் சந்யாசி க

அநுபல்லவி.

கருணை சிறக்கும் கவலைபறக்கும்
காசினிபுகழ் வீசும் நம்தமிழ் கரு

சரணம்.

பெருமைக்கோர் இருப்பிடமே
பெற்றபுஜ பலத்திடமே
பேசும் இந்து சுதேச முஸல்மீன்
நேசபந்து விஸ்வாச சம்மத கரு

தொகையறு

அருமையுள சாத்வீகதருமநெறி தவறாத
அவதார கண்யசீமான்
அகில சத்யாக்கிரக புனிதப் பெரும்போரில்
அருள் உதவு ஞானபூமான்

## பாட்டு.

சாத்வீகப் போர்க்குருவே
சாயுச்சியம் பெறும் திருவே
சாரும் இந்தியர்க்கு வழி காட்டிய
கூறும் சுப்ப ராஜத் தமிழ்நாட்டிய — கரு

---

## ஹரி ஹரி சாமுத்திரிகா என்ற மெட்டு.

### பல்லவி.

செல்லுவோம்—செல்லுவோம்
சீராய்க் கடற்கரை உப்பெடுக்க — செ

### அநுபல்லவி.

ஜெயநாயக மயமேபுய வலியேமிக சுயமாக நாம் — செ

### சரணம்

சீர்மிகும்பாரத நாட்டுச் செல்வத்தைக் கைப்பெற்றிட
சென்று சத்தியாக்கிரகம் செய்து ஜெய முற்றிட
பார்புகழ் மகாத்மாகாந்தி பாதையைப் பின்பற்றிட
பலரும் நற்றிட—மாகப்
பயணம் வைத்திட
படிமேல் ஜெயமடைந்திட தமிழ் கொடியேகொடி முழங்கிடும்படி — செ

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட கடலுப்புக்குத் தீர்வையா
கண்ணிருந்தும் கடவுளுக்கு கவர்ன்மெண்டின்மேல் பார்வையா
இடங்கொடுத்ததாலே இந்துக்கிடையூராச்சு கோர்வையா
இனிமேல் சேரையா—உப்பு
எடுக்கப் பாரையா
இனமாகநாம் ஒருமனப்படி கனமாம்சுப்பு ராஜன்சொற்படி — செ

---

## நம்பிக்கை கொண்டெல்லோரும் என்ற மெட்டு.

### பல்லவி.

சந்தோஷம் கொண்டெல்லோரும்
சாத்வீகப் போர் செய்வோம்
சாத்வீகப் போர் செய்வோம்
சமதர்மத்தால் உய்வோம் மெய் சந்

### அநுபல்லவி.

சைன்ய பலங்கள் நமக்கேது
உப்பு சத்தியாக்கிரக மிதுதோது
வெகுசமரசத்தொடு தர்மஅமர் சாத்வீகமுறையில்
சார்வோம் தப்பாது மெய் சந்

### தொகையறு.

சாந்தமே உருவாம் காந்தி சாத்வீக பாணத்தாலே
சாரும் சர்க்காரின்மீது சமர்செய்யச் சென்றதாலே
மாந்தர்களான நாமும் மர்மமுற்றிருந்திட்டாலே
மானிலம் பழிக்கும் நம்மோர் மானத்தைக் காற்பீர் மேலே

### பாட்டு.

### அநுபல்லவி எடுப்பு.

உப்பை எடுப்பதற்குச் செல்வோம்—நமக்
குரிமை கிடைக்கப் போரை வெல்வோம்—இனி
உறக்கம் எதற்கு ஜெயமுழக்கும் சுப்பராஜனின்
ஓங்கும் தமிழ் சொல்வோம் மெய் சந்

---

## கைத்தொழிலும் வர்த்தகமும் என்ற மெட்டு,

அட்டாளதேசத்திலே அரும்பெரும் திருவாசத்திலே
இஷ்டமுள்ள காந்திமகான் இயக்கமொன்று ண்டானத்திலே
கட்டுப்பட்டார் இந்தியர்கள் கதர்உடுத்த
கைத்தொழிலோ டாக்ஷியையுமே நிலைபடுத்த அட்

ஏழைமக்கள் துயர்தடுக்க இந்தியர்க்கு வழிவிடுக்க
காலைவைத்தார் போர்தொடுக்க கதரைத்தந்தார் நாம்உடுக்க
கடற்கரைக்குச் சென்றிருந்தார் உப்பை அள்ள
கவர்மெண்டார் சட்டத்தை மெதுவாகத்தள்ள — அட்

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுமுப்பதாம் வருஷத்திலே
தூயமார்ச்சுபனிரெண்டிலே தொண்டர்படை மத்தியிலே
ஆரம்பித்தார் சாத்வீகப்போர் அன்றுதொட்டு
அலைகடல்சூழ் புவிக்காக வெகுபாடுபட்டு — அட்

சபர்மதி ஆச்சிரமம்விட்டு சந்தோஷமாய்ப் புறப்பட்டு
அமர்ந்து பல கிராமந்தொட்டு அன்பாய் டாண்டி சென்றுவிட்டு
அரியபெரும் உப்பை எப்ரல் ஆறினிலே
ஆனந்தமாய் எடுத்தார் காந்தி நேரினிலே — அட்

அன்று பல நகரத்திலே அறிய உப்பை எடுத்ததிலே
சென்று போலீஸ் பிடித்ததிலே சிறைக்குச்செல்ல துணிந்ததிலே
கண்ணுனை தொண்டர் பலர் கைதியானார்
கலங்கா யிளம்வேங்கையைப்போல் நேரில் போனார் அட்

பம்பாய் கல்கத்தா எங்கும் பரபரப்பு அதிகமாச்சு
தென்பாக காந்திமகான் தேசத்திடம் கொடுக்கலாச்சு
அன்போடுநம் இந்தியா சுயாக்ஷிபெற
அன்பன் சுப்பராஜன் வாக்கு அமுதமுற — அட்

## ராட்டுப்பாட்டு

### ஆடு ராட்டே என்ற மெட்டு,

#### பல்லவி.

சுற்றுராட்டே சுற்றுராட்டே
சுழன்று சுதேசி கையில் சுற்றுராட்டே — சு

#### அநுபல்லவி.

ஒற்றுமையாய் பருத்தி பஞ்சினுலே
ஒருமையாய் ராட்டினத்தில் நூற்ற நூலே
பற்றுதலாய் அதைத் தறியின் மேலே—நெய்ய
பரிந்து பரிந்து பஞ்சில் சுற்றுராட்டே — சு

ஆதியில் உன்னால் இந்தக்காசாக்ஷி
அதை ஆங்கிலர் பிடுங்கினர் அது சூக்ஷி
நீதியில்லாத கொடுங் கோலாக்ஷி அது
நிலைக்குமோ நீரேழி சுற்றுநாட்டே சு

ஒத்துழையாமையில் வந்தருள் நாட்டே
உப்பெடுப்போர்பக்கம் உதவு நாட்டே
வெற்றிதரும் வீரத்தை அருள் நாட்டே
வித்வான் சுப்பராஜனால் விளை நாட்டே

---

## கதரின் பெருமை.

---

### எண்சீரடி ஆசிரிய விருத்தம்

கல்விநிறை பொறை அறிவு கருணைமிகு காந்திகள்
கைகண்ட கதரல்லவோ
கண்ய சத்யாக்கிரக புண்ணியப்பெரும் போரில்
கைதந்த கதரல்லவோ
செல்வமிகு கோகலே திலகரை சிரஞ்சீவி
செய்ததும் கதரல்லவோ
செம்மையுற இந்திய சுதந்தரப்போர் முனையில்
சென்றதும் கதரல்லவோ
வல்லபமிகுந்த தாதாபாய்க்கு ஜீவியம்
வளர்வித்த கதரல்லவோ
வங்கதேசத்திலச சிங்க ஸீ ஆர் தாசின்
வளமுலவு கதரல்லவோ
நல்ல புகழொடு இந்திய நாட்டிற்கு அரசுரிமை
நடத்துதல் கதரல்லவோ
நமது செந்தமிழ் சுப்பராஜ மதுரிதமீது
நடனமிடு கதரல்லவோ

### காக்ஷி கண்காக்ஷியே என்றமெட்டு.

**பல்லவி.**

காக்ஷி கண்காட்சியே காந்தி உப்புச்செய்திட்ட காக்ஷி

## அநுபல்லவி.

ஆஷியம் பிரிட்டிஷின் அரசாட்சிக்குள் சுயாக்ஷீமிக்க காஷி

## சரணம்.

மாக்ஷிமை தங்குமகாத்மா காந்தி சாந்தப் போரிலே
மாதொண்டர் படையொன்றை யுண்டாக்கித் தானும் நேரிலே
சாக்ஷியாய் சாத்வீக சட்ட சம்மாரத்தைப் பாரிலே
சார்ந்துசெய்ய டாண்டி நாட்டிற்கேகி—உப்பு
சட்டத்தை உடைத்திட்ட விவேகி—இந்திய
சாஸ்வதம் புனித தியாகி
சமரச விஸ்வாசி சம்பன்னக் கதர் நேசி
குமர ஸ்ரீசந்யாசி கோரும் இந்தசுதேசி காஷி

இந்தியாடிமைத்தனப் பந்தத்தை விலக்கவே
ஏகமாய் சாத்வீகப் போரியக்கத்தை முழக்கவே
சந்ததம் உப்புச்சட்ட சம்மந்தத்தைத் துலக்கவே
சத்திய தர்மத்தை நிலை நாட்டி—ஜன
சர்வ சமூகங்களையும் கூட்டி—டாண்டி
சத்தியாக்கிரக வழி காட்டி
சமர் புரிந்தஞானி சமூக அபிமானி
அமர் சாத்வீக மோனி அவதாரநிதானி காஷி

கற்பிணிகள் உப்பெடுக்கக் கால்நடையாய்ச் சென்றதும்
காந்தியார் சொல்லைப்போல் கடல்நீரை அங்குமொண்டதும்
அற்புதமாய் உப்புச்செய்ததனுல் போரை வென்றதும்
யாரினுல் கூறமுடியும் தீரம்—பெண்கள்
ஆயிரக்கணக்காய் வரும் வீரம்—ஜெய
ஆனந்தக்கோஷத்தின் ஆரவாரம்
அதிர்ச்சி யெங்கே போச்சு அனைத்தும் ஜெயமாச்சு
சுதந்திரப்போராச்சு சுப்பராஜனின் பேச்சு கா

## கோறுங்கள் கோறுங்கள் என்ற மெட்டு.

### பல்லவி.

சந்தோஷம் சந்தோஷம் சந்தோஷமே ராட்டினச்
சந்தோஷம் சந்தோஷம் சந்தோஷமே சந

### அநுபல்லவி.

சாந்திசெய்யும் காந்திமொழி
ஈந்தியர்க்கு வாய்ந்தவழி சந்

### சரணம்.

அந்தமதாய நம் முன்னோர்களினாலே
அற்புதமாய் பஞ்சில் நூற்றிட்ட நூலே
இந்து சகோதரி தங்களின் மேலே
இப்பொழுதே கண்டோம் அந்நியச்சேலே சந்

கற்புள்ள நம் தாய் தங்கையர்கள் மானம்
காற்பது நம்மோர் கடமைப் பிரதானம்
பொறிபில்லா அயல் நூல் நின்றுலவமானம்
போகாதீர் புத்தி மோசம் செய்நிதானம் சந்

இந்திய மக்களெல்லாம் ஏழையாச்சு
இல்லாமல் ராட்டினம் எங்கோடிப்போச்சு
அந்தமாய் காந்தி அறிவிக்கும் பேச்சு
அன்பாய்க் கடைப்பிடித்தா லின்பமாச்சு சந்

சுதாபிமானத்தைக் கார்க்கும் விஸ்வாசன்
கை ராட்டினத் தொண்டை செய்புபந்நியாசன்
மதபேதத்தை தவிர்த் தாளும் பிரகாசன்
மாநிலத்தில் கீர்த்தி கொள் சுப்பராஜன் சந்

---

## அடைக்கலமே என்ற மெட்டு.

### பல்லவி.

சுற்றுங்களே சுற்றுங்களே
சுகந்தரும் பாக்கியத்தை சுகுணக் கைராட்டினத்தை சுற்

## அநுபல்லவி.

ஒற்றுமையாய இந்தியர்க்குயர் நலப்பாதே
ஒருமையாய் ராட்டைக்கொண்டு உழைப்பீர் இப்போதே சுற்

## சரணம்.

நற்றவத்தால் இந்திய நாட்டினில்ஜெனித்து
நமக்காகப் பாடுபட தன்னலம் விடுத்து
சுற்றுத் திக்குவிஜய சுபக்கொடி பிடித்து
சுதந்தர கதர்ப்போர் செய் காந்தி சொல்லை அடுத்து சுற்

உலக முன்னேற்றத்திற்கு உருக்கொண்ட மூர்த்தி
ஒத்துழையா மியக்கம் உதவிய கீர்த்தி
நலமாய் சத்யாக்கிரகம் நடத்திய பூர்த்தி
நாடெங்கும் சட்டமறுப் பானதே நேர்த்தி சுற்

மங்கள மாதர் சாந்த மகாத்மாவின் போரில்
மார்தட்டி முன்னணியில் மயங்காது நேரில்
சிங்கம் போலக் கர்சித்து ஜெடங் கொள்ளபாரில்
செல்வ சுப்ப ராஜனின் சொல்லால் ஒவ்வொரு ஊரில் சுற்

# வேலுமயிலுந்துணை என்ற மெட்டு.

## பல்லவி.

கதராணிந்தாலே கைமேல் ஓம் ரூலே க்த

## அநுபல்லவி.

காந்தி நம்சாந்தி செய்தீந்தியா முனம்வர கத

## சரணம்.

மத ஒற்றுமைகொடுக்கும்
மாராதுயர் தடுக்கும்
மானம் நிறைஞானம் பிரதானம் தரும் உயர்திரு கத

ராட்டினத்தில் நூல் நூற்று
நலமாய்த் தரியில் கோர்த்து
நாமே நெய்வோமே ஜெயமாமே இடையினிற்பட கத

வஸ்த்ர தானம் கொடுத்து
வாழ்ந்த நாட்டைவிடுத்து
வாங்கி மனமேங்கி நாம்தூங்கி இருந்ததைமரந்தினி
விழித்தாலே கைமேல் ஓம் ரூலே கத

கற்புள்ள மாதர்கள்மேல்
கண்டோம் அன்னியர் கைநூல்
காரம் திடதீரம் ஜெயவீரம் மூடனித்தினம் கத

கடவுள் சம்மதம்மீறி
கட்டும் துணிக்கோவரி
காக்ஷி வெகுரூக்ஷி அரசாக்ஷி தனைவிடப்படும் க்த

சாத்வீகப்போராசன்
சக்ராயுதப் புருஷன்
காந்தி நமையேந்தி சுபகாந்தி ஜெயவெனத்தரும் கத

சுத்தக்கதர்ப் பிரசங்கம்
சுப்பராஜன் சொல்லெங்கும்
ஜோதி மனுநீதி மிகுங்கியாதி சுபகரதிரு கத

## எட்டுசாண்பனமரத்தே என்ற மெட்டு.

கடற்கரையில் காந்தி உப்புக்காச்சிடும் காக்ஷி
கருத்தோகை சுயாக்ஷி
கவர்ன்மெண்டாரின் ரூக்ஷி

அதுகடந்து எப்றவில் நடந்தாறில் உப்பு
கைப்பற்றும் பேச்சு
காந்திக்கே ஜெயமாச்சு கட

ஒத்துழைக்க பெண்கள்சென்று உப்பள்ளும் நேர்த்தி
ஒய்வில்லாத கீர்த்தி
உலகோங்கிடும் பூர்த்தி

சுயஉரிமைக்கு இந்து சிறுமிகள் வந்து
உலருப்புபாத்தி கட்டி
உப்பு செய் நேர்த்தி

ஸ்ரீமதி கஸ்தூரிபால் சரோஜினி தேவி
மிஸ் தயாப்ஜியும் மேவி
கனம் முன்ஷியும் தாவி
ஜெயமுளங்கிடச் சட்டம் கலங்கிடவே
முன்னணியினிற்கூவி நின்ற
முதிற் சிரஞ்சீவி கட

நம்நாட்டு சுதந்தரத்தில் நாமும் உப்பெடுக்க
அயல்நாட்டார்கள் தடுக்க
இதுஞாயமோகெடுக்க
போரைநடத்தும் காந்திகள் விடுத்த அகிம்சை
நலத்தினை கொடுக்க
சுப்பராஜன் சொல்தொடுக்க கட

---

## விருத்தம்.

பிள்ளை பலயீன்றும் நின் பெருமை மிக அரசுரிமை
பிறர்கொண்டு செல்வதழகோ
பிரபலத் தமிழ்வீர மக்கள்களை அன்னியர்
பின்னடிமை யாக்கலழகோ
கொள்ளைகொள செல்வசுக போகம் கொடுத்தும்
கொடுங்கோலில் வாழ்வதழகோ
கொஞ்சமுன் கண்திறந் தஞ்சலெனை ஓர்விடை
கொடுக்கா திருப்பதழகோ
கள்ளமன வெள்ளையர்க் குள்ளிருந்தவர் பிறகு
கைகட்டிச் செல்வதழகோ
கடலில் விளைஉப்புக்கு தடபுடல்செய் இங்கிலீஷ்
கவர்மெண்டின் நீதி அழகோ
உள்ளதை உணர்ந்து சுய உரிமையை கைகொள்ள
உதவா திருப்பதழகோ
உரைசுப்பராஜனிரு தயமதனில் நடனமிடு
உலவு பாரத தேவியே.

## பாட்டு.

### மாமணி மரகதசுப கர என்ற மெட்டு

தேசமுன்னேற்ற இந்து நேசனே மகாத்மா
திகழும் ஜீவாத்மா—காந்தி தே

மாசேகிடப்ரகாச மாயுதித்த மூர்த்தி
மானிலத்தோரின் வறுமை யேதவிர்க்கும் கீர்த்தி

சாத்வீகப்போரில் சட்டத்தை உடைத்த காந்தி
சமரச சத்தியாக்கிரகமே இதற்கு சாந்தி தே

உப்புச்சட்டத்தை உடைத்தெரிந்திட்டமாதீரர்
ஓங்கும் நம் இந்துவில் காந்தி உத்தம குபேரர் தே

சாந்தடா ஜனசமூக சக்ர வர்த்தி ஞானி
சாரும் சுப்பராஜனின் தமிழுக்கபிமானி தே

### சத்தியம் என்று மேதளரா என்ற மெட்டு.

வெற்றிகொளும் சத்தியத்தமிழ்நாடு சதுர்
வேதங்கள் முழங்கும் பரிவோடு
எற்றிக்கும் இதைப்போலுண்டோ ஈடு இனி
ஏமாரா திருக்க வழி தேடு வெ

வெள்ளையர் பிழைக்கவந்த சீமை அவர்
வேந்தரானதும் நம் அறியாமை
கொள்ளை கொடுப்பதுவோ நம் மேன்மை இது
கூடாது எங்கே இந்தியராண்மை வெ

வந்தபோதிருந்த ராஜரீகம் காலம்
வரவர கெட்டுதவர் யூகம்
இந்தியர்க்கேனில்லை இன்னும் வேகம் தூங்கா
தெழுந்திருந்தாலினி உற்சாகம் வெ

காந்தி யென்ற சாந்தம் உருவாச்சு நம்மோர்
கவலையெல்லாம் பறந்து போச்சு
மாந்தர்க்கு நாட்டினம் துணையாச்சு இந்திய
மக்களுக்கே சர்வ ஜெயமாச்சு வெ

பாட்டிமார் கொட்டை நூற்ற கைராட்டு ஆதி
பண்டைத் தொழிலில் புத்தியை நாட்டு
கோஷ்டியாய் ஒவ்வொருவரின் வீட்டு ஆண்பெண்
கோரிசுற்ற வாழ்வோம் கொடிபோட்டு வெ

மங்களம் சொழிக்கும் தஞ்சை வாசன் தமிழ்
மாநகர் காந்தையின் விலாசன்
சங்க முத்தமிழில் பிரகாசன் வித்வ
சம்பன்னசீமான் ஸ்ரீ சுப்பராஜன் வெ

---

## பாண்டியனீன்ற மீனாக்ஷி என்ற மெட்டு.

| | |
|---|---|
| காந்தியே | கடவுளவதாரம் |
| கதரைகை | கொடுத்த உபகாரம் |
| ஈந்தியர்க் | கேனினி விசாரம் |
| ராட்டினை | எடுப்போம சிலநேரம் காந் |

### தொகையறா.

சாந்தமே ஒருருக் கொண்டவதரித்திட்ட
சம்பனன சத்திய சீமான்
சாஸ்வத சுதந்தரப் போர்முனையில் சாத்வீக
சமர்செய் அவதாரபூமான்

### பாட்டு.

| | |
|---|---|
| ராட்டினம் | நாட்டுக்கரசாக்ஷி |
| நானிலம் | நலங்கொளிது சூக்ஷி |
| சூட்டுவோம் | சுதந்தர சுயாக்ஷி |
| சுதேச | சுபத்திற்கிதத்தாக்ஷீ |

### தொகையறா.

மீட்டு நம்மிந்தியரை மேலாக்கி விடுவிக்க
மேன்மைமிகு கெண்யமூர்த்தி
மேதினிதனில் புனித சாது சத்தியாக்கிரக
மேஉதவு தேதகீர்த்தி

பாட்டு.

தஞ்சைவாழ் தமிழுற்பவக் கீர்த்தி
தரணியோர்க் குதவும் தமிழ் பூர்த்தி
கொஞ்சுமா வளர்ந்தவழும் சேர்த்தி
கூறும்ஸ்ரீ சுப்பராஜூமூர்த்தி காங்

## ரெகுபதிராகவ ராஜாராம் என்ற மெட்டு.

திருமகள் வாழ்தமிழ் நாட்டுக்கு ஜே ஜே
திகழும் திலகர் திருவடிகட்கு ஜே ஜே திரு

மருவும் தாதாபாய் மலரடிகட்கு ஜே ஜே
மதிப்பைக் கொடுத்த லஜபதிராய்க்கு ஜே ஜே திரு

கருதும் விவேகானந்தர் கருணைக்கு ஜே ஜே
கண்ய வீயார்தாஸ் கோகலைகட்கு ஜே ஜே திரு

பரவும் மகாத்மாகாந்தி பாதாரம் ஜே ஜே
பாக்யம் கொடுக்கும் கதர் ராட்டிற்கு ஜே ஜே திரு

(அவையடககம்)

நற்றமிழை அறிந்துணர்ந்த ஞானியல்ல
நறுமதுரக் கவிபொழியும் கம்பரல்ல
கற்றறியா அருள் காளமேகமல்ல
கலைமகள் கடாக்ஷ வித்வக்காளியல்ல
சொற்றவரா மெய்யுரை வள்ளுவருமல்ல
சொரூபசுப அறிவுநிறை விசாலத்தாலே
குற்றமறஉரைத்து மதிற்குற்றம் காணில்
குவலயத்துப் பெரியார்கை குணங்கொள்வீரே.

---

## வந்தேமாதரம்

போலிப் புத்தகங்களைக்கண்டு ஏமாராமல் சென்னை V. R. ஏழுமலைப் பிள்ளை அவர்களால் பதிப்பித்த காந்தி மறியல் பாட்டு 1, 2 பாகம் அவசியம் பார்க்கவும். விலை அணா 0—2—0

---

மனோரஞ்சினி பிரஸ், சௌகார்பேட்டை, சென்னை.

# ஏமாறவேண்டாம்! இனி ஏமாறவேண்டாம்!!

ஏன்?

வி. ஆர். ஏழுமலைப்பிள்ளையவர்களால் பதிப்பித்தது.

உண்மையான விஷயங்களுடன் பழையக்கொக்கோகம்

வெளிவந்து விட்டபடியால், இனி ஏமாறவேண்டாம்!

## அமுர்தநிலை சக்கரங்கூடிய

பழைய

# கொக்கோகம்.

மூலமும் உரையும்

இவ்வறிய நூலின்கண் சதிபதிகளின் அவயலக்ஷணங்களும் மர்ம ஸ்தானங்களின் அமைப்பும் காமவுற்பவம் சம்போகத்தின் விளக்கம் மாதவிடாயின் தத்துவம் இன்ப காலத்தில் நிகழுவதென்ன? இன்ப மனுபவிக்கும்முறை சம்போகக்கிரமம் மர்ம ஸ்தானங்களின் பேதாபேதம் மாதர்களுக்கு அமிர்தமிருக்குமிடமும் ஸ்தானத்திற்குறிய தொழில் கலவியில் கொக்கோக லீலை ஆண்மலடும், பரிகாரமும், பெண்மலடும் பரிகாரமும் மனம்போல் மக்களைப்பெரும் பாக்யம், ஸ்திரிகள் புருஷர்களை வஸியப்படுத்தும்முறையும் புருஷர்கள்பெண்களை வஸியப்படுத்தும் முறையும் பள்ளியறையின் நிகழ்ச்சி, இதுபோல் இன்னும் நூற்றுக்கணக்கான விஷயங்கள் அடங்கியிருக்கிறது. இந்நூலை வாலிபர் முதல் வயோதிகர் வரையில் ஆண் பெண் இருபாலரும் அவஸியம் வாங்கி வாசிக்கவேண்டியது சுமார் 5 வருடகாலமாக வெகு கஷ்டப்பட்டு தயார் செய்யப்பட்டது சொற்ப காபிகளே கையிலிருப்பதால் முந்தின வருக்குத்தான் புஸ்தகம். 64 கொக்கோக லீலா விநோத ரகசியப் படங்களுடன் சொற்ப விலை ரூ. 2 0 0

நீங்கள் சதா சிறிப்பையும் சந்தோஷத்தையும்

அடைய வேண்டுமானால்?

அண்டப்புளுகனை அதட்டி, ஆகாயப்புளுகனை மிரட்டி, திடீர்புளுகனை துரத்தி, ஜண்டப்புளுகன் வண்டிப்புளுகன் மதறாஸ் புளுகன், முதலிய பிரபல புளுகர்களை ஜெயித்து புளுகர்களுக்கு அரசனாக விளங்கிய நிமிஷப்புளுகனை வென்ற,

## நிஜப்புளுகன்.

என்னும் புத்தகத்தை உடனே வாங்கி வாசியுங்கள்.

இதன் விலை அணா, 0—6—0.

---

எமது விலாசம்:—பி. வி. முருகர் & கோ.

47, திருப்பள்ளித் தெருவு, சௌகார்பேட்டை போஸ்டு, மதறாஸ்.